பதிப்புரிமை ஆசிரியருக்கே / All Rights to Author

# GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) அலகுப் பரீட்சை - சனத்தொகை
General Cerificate of Education (Adv. Level) Unit Examination - Population

புதிய பாடத்திட்டம் / New Syllabus

புவியியல் I,II
Geography I,II

22 T I,II

## சனத்தொகை

இரண்டு முப்பது மணித்தியாலம்
Two thirty hours

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A
077 2400 707 / 076 8044 959

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி I மொத்தப் புள்ளிகள் [ ]
பகுதி II மொத்தப் புள்ளிகள் [ ]
இறுதிப் புள்ளிகள் [ ] 100

## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை அதன் அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**1.** "மனித செயற்பாடுகள் தொடர்பான புவியியல் ரீதியான கற்கை" எனப்படுவது.
1. மானிடப் புவியியல்  2. பௌதிகப் புவியியல்  3. நவீன புவியியல்
4. காலநிலைப் புவியியல்  5. செய்முறைப் புவியியல்  (……)

**2.** 2050 இல் உலகளாவிய ரீதியில் 'சனத்தொகை வயோதிபமடைதல்' **உயர்வாகக்** காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ள நாடு.
1. இலங்கை  2. ஜப்பான்  3. ஸ்கொட்லாந்து
4. சுவிஸர்லாந்து  5. சிங்கப்பூர்  (……)

**3.** 2018 இல் நடுவாண்டு குடித்தொகை அளவு ('000).
1. 20.9 மில்லியன்  2. 21.4 மில்லியன்  3. 21.9 மில்லியன்
4. 21 மில்லியன்  5. 21.6 மில்லியன்  (……)

**4.** உலக '**சனத்தொகை தினம்**' கொண்டாடப்படுவது.
1. ஜுன் 11  2. ஜுலை 11  3. ஜுன் 22
4. ஆகஸ்ட 11  5. மார்ச் 22  (……)

**5.** சனத்தொகையில் **'இயற்கை வளர்ச்சி'** எனப்படுவது.
1. குடிவரவு, குடியகல்விற்கு இடையில் காணப்படும் வேறுபாடு.
2. பிறப்பு விகிதத்திற்கும், இறப்பு விகிதத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
3. பிறப்பு விகிதத்திற்கும், குடியகல்விற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
4. குடிவரவிற்கும், இறப்பு விகிதத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
5. குடிவரவிற்கும், பிறப்பு விகிதத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.

**6.** தற்போது உலகில் சனத்தொகை கூடிய நாடு **மற்றும்** நகரம் என்பன **முறையே.**
1. இந்தியா, டோக்கியோ  2. சீனா, டோக்கியோ  3. டோக்கியோ, சீனா
4. இந்தியா, பீஜிங்  5. சீனா, மும்பாய்  (……)


**7.** பின்வருவனவற்றுள் சனத்தொகை அடர்த்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் **ஒன்று.**
1. இடப்பெயர்வு 2. குடும்பக்கட்டுப்பாடு 3. பொருளாதாரம்
4. உட்கட்டமைப்பு 5. போக்குவரத்து (……)

**8.** நிரந்தர வதிவிடம் நோக்கிப் புலம்பெயரும் வெளிநாட்டு இடப்பெயர்வாளர்கள் சேரும், பிரதான நாடுகளின் தொகுதி.
1. ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, ரஷ்யா, பிரித்தானியா
2. சவுதி அரேபியா, ஓமான், கட்டார், குவைத்
3. ஜப்பான், தென்கொரியா, சீனா, மலேசியா, இந்தியா
4. இத்தாலி, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சீனா
5. பிரான்ஸ், இத்தாலி, கனடா, சிங்கப்பூர், நோர்வே (……)

**9.** **2018** ஆம் ஆண்டில் செப்பமற்ற பிறப்பு, இறப்பு வீதம் **மற்றும்** இயற்கை அதிகரிப்பு வீதம் என்பன **முறையே**
1. 15.0%, 6.3%, 9.7% 2. 15.1%, 6.4%, 8.7% 3. 6.3%, 8.2%,16.0%
4. 6.3%, 16.0%, 3.9% 5. 16.0%, 9.7%-6.3% (……)

**10.** பின்வரும் விடைகளுள் எது, இலங்கையின் பிறப்பு வீதம் தொடர்பான சமகாலப் போக்குகளில் ஒன்றாகக் கொள்ள **முடியாததாகும்.**
1. ஒரு தாய்க்கு ஐந்து பிள்ளைகள் என்ற நிலையில் காணப்பட்ட கருவள வீதம், இரண்டு பிள்ளைகள் என்ற நிலைக்கு குறைவடைந்துள்ளமை.
2. பிறப்பு வீதமானது படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்கின்றமை.
3. முஸ்லிம்களின் பிறப்பு வீதமானது வீழ்ச்சிப் போக்கைக் காட்டிவருதல்.
4. கொழும்பு, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் பிறப்புவீதம் வீழ்ச்சியடைந்து செல்லுதல்.
5. திருகோணமலை, அம்பாறை, நுவரெலியா மாவட்டங்களின் பிறப்புவீதம், சார்பளவில் உயர்வடைந்துள்ளமை. (……)

- **கீழே தரப்பட்டுள்ள சனத்தொகைக் கூம்புகளை அடிப்படையாகக் கொண்டு 12 - 14 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**




A B C D

**11.** மேற்படி சனத்தொகைக் கூம்புகள் **முறையே.**
1. **(A)** ஆரம்ப கட்டம் **(B)** வளர்ச்சிக் கட்டம் **(C)** ஸ்திரநிலைக் கூம்பு **(D)** நிலையான தன்மை
2. **(A)** வளர்ச்சிக் கட்டம் **(B)** ஆரம்ப கட்டம் **(C)** நிலையான தன்மை **(D)** ஸ்திரநிலைக் கூம்பு
3. **(A)** நிலையான தன்மை **(B)** வளர்ச்சிக் கட்டம் **(C)** ஆரம்ப கட்டம் **(D)** ஸ்திரநிலைக் கூம்பு
4. **(A)** ஆரம்ப கட்டம் **(B)** வளர்ச்சிக் கட்டம் **(C)** நிலையான தன்மை **(D)** ஸ்திரநிலைக் கூம்பு
5. **(A)** ஆரம்ப கட்டம் **(B)** ஸ்திரநிலைக் கூம்பு **(C)** நிலையான தன்மை **(D)** வளர்ச்சிக் கட்டம் (……)

**12.** மேற்படி கூம்புகளுக்கு உதாரணமாகக் **கொள்ளக்கூடிய** தலா ஒவ்வொரு நாடுகள் **முறையே.**
1. எதியோப்பியா, இந்தியா, ஆர்ஜென்டீனா, சுவீடன் 2. கென்யா, இந்தியா, சுவீடன், ஆர்ஜென்டீனா
3. இந்தியா, ஆர்ஜென்டீனா, கென்யா, சுவீடன் 4. கென்யா, இந்தியா, வத்திக்கான், சுவீடன்
5. ஆர்ஜென்டீனா, கென்யா, இந்தியா, சுவீடன் (……)


**13.** மேற்படி சனத்தொகைக் கூம்புகளில் பிறப்பு மிக **உயர்வாகவும்**, இறப்பு மிகக் **குறைவாகவும்** காணப்படும் நாட்டுக்குரிய **கூம்பு / கூம்புகளாவன.**
1. **B, D** 2. **D** 3. **B**
4. **A, B** 5. **C** (……)

**14.** குறித்த வருடமொன்றில், **15 – 49** வயதிற்கு இடைப்பட்ட ஆயிரம் பெண்களுக்கு ஏற்படும் **மகப்பேறு.**
1. பிறப்புவீதம் 2. சராசரி கருவள வீதம் 3. இயற்கை வளர்ச்சி வீதம்
4. பால்நிலை வீதம் 5. இயற்கை வளர்ச்சி (……)

**15.** குடித்தொகை ஒன்றில் **'இயங்கா வளம்'** என்பதனுள் உள்ளடக்கப்படுவோர்.
1. தொழில்நுட்ப அறிவுடைய குடித்தொகையினர்.
2. உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் வயதுப் பிரிவினர்.
3. உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடாது தங்கிவாழ்வோர்.
4. பௌதிக வளங்களை உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவோர்.
5. மூளை உழைப்பில் ஈடுபடுவோர். (……)

**16.** **"சனத்தொகைக் கட்டமைப்பு"** எனப்படுவது
1. பிரதேச ரீதியான சனத்தொகைப் பரம்பல்.
2. இடத்திற்கிடம், காலத்திற்குக் காலம் சனத்தொகையில் ஏற்படும் நகர்வு.
3. வயது, பால், இனம் சார்ந்ததும், பிறப்பு சார்ந்த கூட்டுக்களினதும், கல்வி, பண்பாடு, பொருளாதாரம் சார்ந்த சூழல்சார் கூட்டுக்களினதும் தொகுப்பு.
4. ஒரு நாட்டின் பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு என்பவற்றின் தொகுப்பு.
5. காலத்திற்குக் காலம் சனத்தொகையின் இயக்கப் பண்புகளில் ஏற்படும் மாற்றம். (……)

**17.** அருகில் தரப்பட்டுள்ள பகுதியளவான இலங்கைப் படத்தில் **A, B, C** என அடையாளப்படுத்தப்பட்டுள்ள **சனத்தொகை கூடிய** மாவட்டங்கள் **முறையே.**




1. ஹம்பகா, கொழும்பு, களுத்துறை
2. கொழும்பு, நுவரெலியா, கண்டி
3. முல்லைத்தீவு, மன்னார், கண்டி
4. ஹம்பகா, நுவரெலியா, கண்டி
5. களுத்துறை, ஹம்பகா, கொழும்பு (……)

**18.** பின்வருவனவற்றுள் குடித்தொகை வயது முதிர்விற்குப் பங்களிப்புச் செய்யும் **இரு** காரணிகளாவன.
1. கருவள வீழ்ச்சி மற்றும் இறப்பில் வீழ்ச்சி.
2. ஆயுள் அதிகரிப்பு மற்றும் இறப்பில் வீழ்ச்சி.
3. கருவள அதிகரிப்பு மற்றும் இறப்பில் அதிகரிப்பு.
4. கருவள வீழ்ச்சி மற்றும் இறப்பில் அதிகரிப்பு.
5. சிசுமரண வீத அதிகரிப்பு மற்றும் இறப்பில் அதிகரிப்பு. (……)

**19.** பின்வரும் கூற்றுக்களுள் **பிழையானது.**
1. சர்வதேச ரீதியாக வயோதிபமடைதல் வயதெல்லை 60 என ஐ.நா சபையினால் வரையறுக்கப்பட்டுள்ளது.
2. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தோரில் 94% ஆனோர், 15 – 59 வயதிற்கு இடைப்பட்டோராவர்.
3. 2012 சனத்தொகைக் கணிப்பீட்டின் அடிப்படையில், இலங்கையில் 2.5 மில்லியன் முதியோர் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
4. இடப்பெயர்வாளர்களை அதிகம் கவர்ந்திழுக்கும் மாவட்டங்களாக, கொழும்பு மற்றும் ஹம்பகா என்பன விளங்குகின்றன.
5. உலகின் மொத்த நிலப்பரப்பில் 26 வீதமான பகுதியில், சூனியமான சனத்தொகைப் பரம்பலை அவதானிக்க முடிகின்றது.

(……)

**20.** இலங்கையின், இன ரீதியான குடித்தொகைச் சேர்க்கையை **இறங்குவரிசை**யில் தரும் விடை.
1. சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள்
2. சிங்களவர், இலங்கை முஸ்லிம்கள், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர்
3. சிங்களவர், இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், இந்தியத் தமிழர்
4. சிங்களவர், இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள்
5. சிங்களவர், இலங்கை முஸ்லிம்கள், இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் (……)

A.Kajan - A.Kajan

## பகுதி / Part – II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01. 1.** இடப்பெயர்வு என்பதை வரையறுத்து, அதனைத் தூண்டும் **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.


**2.** இலங்கையின் உள்நாட்டு இடப்பெயர்வின் **நான்கு** அண்மைக்காலப் போக்குகளைக் குறிப்பிடுக.

**3.** அண்மைக்காலமாக, மத்தியகிழக்கு அல்லாத நாடுகளுக்கு இலங்கைத் தொழில்சார் இடப்பெயர்வின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்வதில் பங்களித்துள்ள **மூன்று** காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

**4.** இடப்பெயர்வின் காரணமாக விருத்திபெற்ற நாடுகள் எதிர்நோக்கும் நான்கு சவால்களை சுருக்கமாக ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

**02. 1.** உமக்கு வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் **A, B, C** மற்றும் **D** எனப் பெயரிடப்பட்டுள்ள உலகின் குடித்தொகை கூடிய **நான்கு** வலயங்களையும் **சரியாக** இனங்கண்டு பெயரிடுக.




**2.** குடித்தொகையின் வளப்பெறுமானத்தைத் தீர்மானிக்கும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

**3.** “உலகின் சமனற்ற சனத்தொகைப் பரம்பலானது பௌதிக மற்றும் மானிடக் காரணிகள் இரண்டினதும் விளைவாகும்” – இக் கூற்றினை ஆசிய நாடுகளிலிருந்து உதாரணம் தந்து பரிசீலிக்குக.

**4.** இடப்பெயர்வின் காரணமாக ஏற்படவல்ல சாதக **மற்றும்** பாதக விளைவுகள் இவ்விரண்டைச் சுருக்கமாக விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**03. 1.** குடித்தொகைப் பெருக்கக் காரணிகள் யாவை?

**2.** மேலே, வினா **1** இல் உம்மால் பெயரிடப்பட்ட யாதாயினும் இரண்டு காரணிகளைத் தெரிந்தெடுத்து, அவற்றின் முனைப்பான பண்புகளை, இலங்கையுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

**3.** சனத்தொகை வயோதிபமடைதலில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளை முன்வைக்குக.

**4.** சனத்தொகை வயோதிபமடைதலால் குறைவிருத்தி நாடுகள் எதிர்நோக்கும் நான்கு சவால்களை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**04. 1.** தரப்பட்ட உலகப் புறவுருவப் படத்தில் பத்து மில்லியனுக்கு மேலாக சனத்தொகை செறிந்து வாழும் **முதல் ஆறு** நகரங்களும் கீழே தரப்பட்டுள்ள. அவற்றைச் சரியாகக் குறித்துப் பெயரிடுக.


(டோக்கியோ, மும்பாய், மெக்சிக்கோ, சாயோபோலோ, நியூஜோர்க், லாகோஸ்)

**2.** உலகக் குடித்தொகையின் அதிகளவிலான வீதாசாரம் ஆசியாவில் இருப்பதற்கான காரணங்களை, ஏதாவது **மூன்று** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்குக.

**3.** விரைவான சனத்தொகைப் பெருக்கத்தினால் ஒரு நாட்டில் ஏற்படவல்ல **நான்கு** பிரச்சினைகளை ஆராய்க.

**4.** உலகக் குடித்தொகையுடன் தொடர்புபடும் முதன்மையான வாதப்பிரதிவாதங்கள் நான்கினை அடையாளம் செய்வதுடன், அவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

**(20 புள்ளிகள்)**



A.Kajan - - A.Kajan

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 1 | 11 | 4 |
| 2 | 2 | 12 | 1 |
| 3 | 5 | 13 | 3 |
| 4 | 2 | 14 | 2 |
| 5 | 2 | 15 | 3 |
| 6 | 2 | 16 | 3 |
| 7 | 1 | 17 | 1 |
| 8 | 1 | 18 | 2 |
| 9 | 2 | 19 | 5 |
| 10 | 3 | 20 | 1 |